செய்தி வெளியீடு:669 நாள் 14.12.2015

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**

**மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் சிறப்பு வெள்ள நிவாரண பள்ளி மருத்துவ முகாம் இன்று முதல் தொடக்கம்!**

---

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் தொற்று நோய் பரவாமல் இருக்க மருத்துவ முகாம்கள், நடமாடும் மருத்துவ முகாம் நடத்தப்பட்டு பொது மக்களுக்கு பரிசோதனைகள் மற்றும் உரிய சிகிச்சைகள் அளிக்கப்பட்டும் வளரிளம் பெண்களுக்கு சானிடரி நாப்கின்களும் வழங்கப்பட்டும் வருகிறது. மேலும் வீடு வீடாக சென்று பீளிச்சீங் பவுடர்கள், குளோரின் மாத்திரைகளும் வழங்கப்பட்டு வருவதோடு மட்டுமல்லாமல் 18 பூச்சியியல் வல்லுனர் குழுக்கள் மூலம் கொசுக்கள் மற்றும் ஈக்கள் பெருக்கத்தை கட்டுப்படுத்த மருந்துகள் அடிப்பது போன்ற பன்முக நடவடிக்கைகள் (Multi Dimensional Activities) தீவிரமாக செயல்படுத்தப்பட்டு தொற்று நோய் பரவாமல் தடுக்கப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக இன்று முதல் பள்ளிகள் திறக்கப்படுவதையொட்டி அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் மருத்துவ பரிசோதனை செய்யவும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் உறுதி செய்யவும், பள்ளி வளாகம் சுற்றுப்புறம் தூய்மையாக இருக்கவும், நோட்டுப் புத்தகங்கள், சீருடைகள், சான்றிதழ்கள் இழந்த மாணவர்களுக்கு மீண்டும் அவற்றை வழங்கவும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

அதன் அடிப்படையில் இன்று முதல் சென்னையிலுள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் மாணவர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்ய பொது சுகாதாரத் துறையின் 20 சிறப்பு நடமாடும் மருத்துவ குழுக்கள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை எழும்பூர் மாநில மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்று வரும் மருத்துவ முகாமினை இன்று (14.12.2015) மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் கே.சி.வீரமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் ஆகியோர் பார்வையிட்டனர். பின்பு பள்ளியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறதா என்பதையும் ஆய்வு செய்தனர், பள்ளி வளாகம் மற்றும் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக்கொள்ள தலைமை ஆசிரியரை கேட்டுக்கொண்டனர்.

இந்த ஆய்வின்போது பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி. D.சபீதா இஆப., மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் இஆப., அனைவருக்கும் கல்வி திட்ட இயக்குநர் திருமதி. பூஜா குல்கர்னி இஆப., மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர். எஸ். கீதாலட்சுமி, பொது சுகாதார மற்றும் நோய் தடுப்பு மருந்துகள் துறை இயக்குநர் டாக்டர் கே. குழந்தைசாமி, மருத்துவம் மற்றும்

ஊரக நலப்பணிகள் துறை இயக்குநர் (பொ) டாக்டர் எஸ். மணி பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் திரு. ச. கண்ணப்பன், தொடக்க கல்வித்துறை இயக்குநர் திரு. இளங்கோவன், பொது சுகாதரத்துறை கூடுதல் இயக்குநர் டாக்டர். வடிவேலன், இணை இயக்குநர் டாக்டர். அகிலா மற்றும் சுகாதாரத்துறை மற்றும் பள்ளிக்கல்வித்துறை உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி. D.சபீதா இஆப., செய்தியாளர்களிடம் கூறியதாவது

‘**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் ஆணைக்கிணங்க இன்று முதல் பள்ளிகள் திறக்கப்படவுள்ளதையொட்டி சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு மருத்துவ பரிசோதனையும், சீருடை, நோட்டுப் புத்தகங்கள் மற்றும் குறைந்த பட்ச கற்றல் கையேடு ஆகியவையும் வழங்கப்படவுள்ளது. மேலும் சான்றிதழ்களை இழந்தவர்களுக்கு 14.12.2015 முதல் 28.12.2015 வரை சென்னையில் 54 பள்ளிகளில் முகாம்கள் நடத்தப்பட்டு ஒரு வாரத்தில் புதிய சான்றிதழ்கள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பள்ளி மாணவ மாணவியர்களுக்கு நாளை முதல் உளவியல் ரீதியான ஆலோசனை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் இஆப., செய்தியாளர்களிடம் கூறியதாவது

‘**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் ஆணைக்கிணங்க இன்று முதல் பள்ளிக் கல்வித் துறையுடன் சுகாதாரத் துறையும் இணைந்து 20 சிறப்பு நடமாடும் மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டு சென்னையில் ஒரு நாளைக்கு 40 பள்ளிகள் வீதம் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நடமாடும் மருத்துவக் குழுவில் உள்ள மருத்துவ குழுவினர் மாணவர்களுக்கு சளி, காய்ச்சல், வயிற்றுப் போக்கு, தோல் நோய் போன்ற நோய்களுக்கு மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டு நோய் தாக்கம் இருந்தால் அவற்றிற்கு சிகிச்சை அளிப்பார்கள். குழுவிலுள்ள சுகாதார ஆய்வாளர்கள் பள்ளி வளாகம் தூய்மையாக இருக்கிறதா என்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறதா என்றும் ஆய்வு மேற்கொண்டு பள்ளி மாணவர்களுக்கு சோப்பு போட்டு கைகளை கழுவுதல், காய்ச்சிய குடிநீரினை பருகுதல், சுற்றுபுறத்தை சுத்தமாக வைத்துக் கொள்ளுதல் போன்ற பொதுசுகாதார ஆலோசனைகளையும் வழங்குவர்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**